பக்கங்கள்:-21

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 22 | புதன்கிழமை | 06.03.2024 | அதிர்வு 218 |
|---|---|---|---|---|---|

## தாய்ப்பால் புரைக்கேறி ஆண் குழந்தை மரணம்

(எம்.எப்.எம். அலி)

பிறந்து ஐந்து நாட்களேயான ஆண் குழந்தை தாய்ப்பால் புரைக்கேறி உயிரிழந்துள்ளது.

இந்தப் பரிதாப சம்பவம் பலாங்கொடை பகுதியில் நேற்று 06

# ஈழத் தமிழர் விடயத்தில் இரட்டை வேடம் போட்டு சாந்தனைப் பழிதீர்த்தது இந்திய வல்லாதிக்கம்!

### யாழில் நேற்று சட்டத்தரணி புகழேந்தி குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

"ஈழத் தமிழர் விவகாரத்தில் இந்தியா இரட்டை வேடம் போடுகின்றது. ஈழத் தமிழர்களுக்காக இந்தியா நிற்காது. உதவியும் செய்யாது. சாந்தன் விவகாரத்தில்கூட பழிவாங்கும் – பழிதீர்க்கும் எண்ணமே இந்தியாவுக்கு அதிகம் இருந்தது."

– இவ்வாறு சாந்தன் வழக்கு சட்டத்தரணி புகழேந்தி பாண்டியன் யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போது தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் 06




# இலங்கை, இந்திய அரசுகளே சாந்தனின் சாவுக்குப் பொறுப்பு

### நாடாளுமன்றில் தமிழரசுக் கட்சி இடித்துரைப்பு

"இலங்கை மற்றும் இந்திய அரசுகளின் அக்கறையின்மை காரணமாக சுதேந்திரராஜா எனப்படும் சாந்தன் என்ற நல்ல மனிதரின் உயிர் பறிக்கப்பட்டுள்ளது. எனவே, இலங்கை, இந்தியா ஆகிய இரண்டு நாடுகளும் சாந்தனின் இறப்புக்குப் பொறுப்புக் கூற வேண்டும்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி, நாடாளுமன்றத்தில் நேற்று குற்றஞ்சாட்டியது. 07



### பஸில் நாடு திரும்பியமையால் ஒன்றும் ஆகப் போவதில்லை

# தேர்தலில் ராஜபக்ஷக்களுக்கு தக்க பாடம் புகட்டுவர் மக்கள்!

### தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு




(எஸ்.நிதர்ஷன்)

"ராஜபக்ஷக்களுக்கு மக்கள் இனி வரும் தேர்தலில் நல்ல பாடம் புகட்டுவார்கள். இவர்கள் அரசியலில் இருந்து விரட்டியடிக்கப்பட வேண்டியவர்கள்."

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் மத்திய குழு உறுப்பினர் 07




தேசியப் பாதுகாப்புத் தொடர்பான நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவின் கூட்டம் நேற்று நாடாளுமன்ற குழு நிலை அறையில் நடைபெற்ற போது யாழ்ப்பாணம் தையிட்டிப் பகுதியில் விகாரை அமைக்கப்பட்ட காணியின் பிரச்சினை குறித்தும் ஆராயப்பட்டது.

அந்த மேற்பார்வைக் குழுவில் தமிழரசுக் கட்சி உறுப்பினராக இருப்பவர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. 06

# பாடசாலைகளின் வளாகங்களில் அரசியல் செயற்பாடுகளுக்குத் தடை

பாடசாலைகள் மற்றும் பாடசாலை வளாகங்களை அரசியல் செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கும் அதிகாரத்தை மாகாண ஆளுநர்களுக்கு வழங்குவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் நேற்று அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



பாடசாலை மற்றும் பாடசாலை வளாகங்களில் அரசியல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுவதாகப் பல்வேறு தரப்பிடமிருந்து முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவற்றைக் கருத்திற்கொண்டு, அந்தப் பகுதிகளில் கூட்டங்கள் உள்ளிட்ட அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதைத் தடை செய்வதற்கு மாகாண ஆளுநர்களுக்கு அதிகாரம் வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

# காங்கேசனில் 61 முதல் 83 வரை வாழ்ந்த 406 சிங்களவர்களின் தையிட்டிக் காணியில்தான் விகாரை அமைக்கப்பட்டிருக்கிறதாம்

## விகாரை பிக்குவும் பிரதேசக் கேணலும் அடித்துக் கூறுகின்றனர்

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் 1961 முதல் 1983 வரை வாழ்ந்த 406 சிங்கள மக்களின் நிலத்திலேயே தையிட்டி விகாரை அமைந்துள்ளதாக அதன் உதவி விகாராதிபதியும் அப் பிரதேச இராணுவக் கேணலும் தெரிவித்திருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் தையிட்டி விகாரை தொடர்பில் நேற்றைய தினம் தேசிய பாதுகாப்பு மேற்பார்வைக்குழுவில் ஆராயப்பட்டபோதே இந்தக் கருத்தை இருவரும் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர, சமல் ராஜபக்ஷ, தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன், காணி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண காணி ஆணையாளர், தெல்லிப்பளை பிரதேச செயலாளர், நில அளவை நாயகம், பௌத்த பிக்குகள், சட்டத்தரணிகள், தையிட்டிப் பிரதேச இராணுவ கேணல் எனப் பலரும் கலந்துகொண்ட இக் கலந்துரையாடல் சுமார் இரண்டு மணி நேரம் நீடித்தது.

இதன்போது யாழ்ப்பாணம் தையிட்டி விகாரை அமைந்துள்ள பிரதேசமான 8 ஏக்கர் நிலமும் விகாரைக்குரிய பிரதேசம், அங்கே 1960 ஆம் ஆண்டு முதல் வாழ்ந்த 406 சிங்கள மக்களுக்கு அது சொந்தமானது, இருந்தபோதும் சில தமிழ் மக்களும் உரிமை கோருகின்றனர், விகாரை உள்ள 8 ஏக்கர் நிலத்தையும் சிங்கள மக்களோ அல்லது தமிழ் மக்களோ உரிமை கோர முடியாது, அது முழுமையாக விகாரைக்குரியது, அங்கே நிலம் இழக்கப்பட்டதாக எவராவது நிரூபணம் செய்தால் அதற்கு மாற்றுக் காணி வழங்கலாம் என பௌத்த சாசன அமைச்சு சார்பில் கலந்துகொண்டவர்களால் தெரிவிக்கப்பட்டது.

### சார்ள்ஸ் கூறியவை

இதன்போது கருத்துரைத்த தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன்,

தையிட்டியில் விகாரை அமைத்துள்ள விகாரையின் பௌத்த பிக்கு 2017 ஆம் ஆண்டு தெல்லிப்பளை பிரதேச செயலாளருகு எழுத்தில் விண்ணப்பித்துள்ளார். அந்த விண்ணப்பத்தில் தனது 20 பரப்பு நிலத்தை அடையாளம் காட்டுமாறு கோரியிருந்தார். அதாவது 1956ஆம் ஆண்டு விகாரையின் பெயரில் ஒருவர் அனபளிப்பாக வழங்கிய உறுதி பௌத்த பிக்குவிடம் உள்ளது. அது அவர்களிற்கு உரித்தான நிலம் என நாமும் ஏற்றுக்கொள்கின்றோம்.

இதே நேரம் 2022 ஆம் ஆண்டு அப் பகுதி இராணுவ அதிகாரி விகாரை அமைந்துள்ள 8 ஏக்கர் நிலத்தையும் விகாரையின் பெயரில் ஆவணத்தை கோரி மீண்டும் தெல்லிப்பளை பிரதேச செயலகத்திறகு விண்ணப்பித்துள்ளார். அவ்வாறானால் இதற்கான அளவீடு யாரால், யாரினுடைய அனுமதியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டது?

தையிட்டியில் விகாரைக்குரிய 1.45 ஏக்கர் நிலம் மட்டுமே. 1956 ஆம் ஆண்டு அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிலம் மட்டுமே விகாரைக்குரியது. இருந்தபோதும் அங்கே எந்தக் காலத்திலும் விகாரை இருந்த ஆவணங்களும் கிடையாது. இவை தவிர 13 தமிழ் குடும்பங்களிற்கு உரித்தான 6.54 ஏக்கர் நிலத்தையும் அபகரித்தே தற்போது 8 ஏக்கரில் விகாரை உள்ளது. அந்த 6.54 ஏக்கர் நிலத்தை நீங்கள் எவ்வாறு சுவீகரிக்க முடியும்? அது முழுமையான சட்ட மீறல் .அந்த 6.54 ஏக்கர்நிலமும்நிலஉரிமையாளர்களிடம் வழங்கப்பட்டே ஆக வேண்டும். - என்றார்.

இதன்போது குறுக்கிட்ட தையிட்டிப் பிரதேச கேணல் தர இராணுவ அதிகாரி, அந்த நிலம் இராணுவ நில அளவையாளர்களால் அளவீடு செய்யப்பட்டு வரைபடம் வழங்கப்பட்டது எனப் பதிலளித்தபோது பெரும் சர்ச்சை ஏறபட்டது.

மக்களிற்குச் சொந்தமான நிலத்தை இராணுவம் மூலம் அடாத்தாகப் பிடித்து வைத்துக்கொண்டு, அந்த நிலத்தை இராணுவமே அளவீடு செய்து, சுவீகரித்துத் தருமாறு கோருவது எந்தச் சட்ட ஏற்பாட்டில் உள்ளது? மக்களின் நிலத்தை அளவீடு செய்ய இராணுவத்திற்கு உரிமை கிடையாது. இவர்கள் யார் அதனை அளப்பதற்கு? - என நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் வேள்விகளை எழுப்பினார்.

அவ்வாறானால் அதனை நில அளவைத் திணைக்களம் அளவீடு செய்து சமர்ப்பியுங்கள் என சரத் வீரசேகர கோரிக்கை விடுத்தார்.

மக்களின் நிலத்தை அவர்களின் சம்மதம் அல்லது பகிரங்க அறிவித்தல் இன்றி அளவீடு செய்ய முடியாது என நில அளவைத் திணைக்கள நாயகத்தால் பதிலளிக்கப்பட்டது.

இவற்றை ஆராய்ந்த குழு எழுத்தில் பதிலளிப்பதாக தெரிவித்து முடிவுகள் இன்றி கூட்டத்தை ஒத்திவைத்தது.

# வவுனியா பஸ் நிலையத்தில் கைவரிசை காட்டியவர் கைது

(கே.வசந்தன்)

வவுனியா பல்கலைக்கழக மாணவர்களிடம் கைவரிசை காட்டிய மன்னாரைச் சேர்ந்த ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஜனவரி மாதம் 3 ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் காலியில் இருந்து வவுனியா பல்கலைக்கழகத்திற்கு வந்த இரு மாணவர்கள் அதிகாலை வேளை புதிய பஸ் நிலையத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருந்த போது அவர்கள் பயணிகள் இருக்கையில் அமர்ந்த நிலையில் தூங்கியுள்ளனர்.

தூக்கம் முடிந்து எழுந்து பார்த்த போது, அவர்களில் ஒருவர் முதுகில் அணிந்திருந்த 'பாக்'கைக் காணவில்லை. அதில் இருந்த இரு கைத்தொலைபேசி மற்றும் சங்கிலில் எனப் பனவுன் காணாமல் போயிருந்தன.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட மாணவர்கள் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர். முறைப்பாட்டுக்கு அமைய வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் ஆலோசனைக்கு அமைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஜெயதிலகவின் வழிகாட்டலில் பொலிஸ் சார்ஜன்ட் திஸநாயக்கா, பொலிஸ் கான்ஸ்டபிள்க ளான தயாளன், கீர்த்தனா ஆகியோர் அடங்கிய குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, மன்னாரைச் சேர்ந்த 44 வயதுடைய சந்தேக நபரை பொலிஸார் சூட்டுசுமான முறையில் அனுராதபுரத்திற்கு வரவழைத்து அங்கு வைத்துக் கைது செய்தனர். அதன்பின் அந்த சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் திருடப்பட்ட கைத்தொலைபேசி மற்றும் சங்கிலி என்பன கொக்கிராவ, புத்தளம் ஆகிய இடங்களில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணையின் பின் சந்தேக நபரை சான்றுப் பொருள்களுடன் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# உண்மை, ஒற்றுமை, நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுச் சட்டம் தொடர்பில் ஆராய்வு

இலங்கையில் தேசிய நல்லிணக்கம், ஒற்றுமை மற்றும் சமூக நீதியை மேம்படுத்தும் நோக்கில் உத்தேச 'உண்மை, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுச் சட்டத்தின்' வரைவு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் இரண்டு விசேட கலந்துரையாடல்கள் அண்மையில் கொழும்பில் நடைபெற்றுள்ளன.

அவற்றில் ஒரு கலந்துரையாடல் இமாலயப் பிரகடனக் குழுவின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பல நிபுணத்துவ அறிவுள்ள பல தரப்பினரின் பங்கேற்புடன் நடைபெற்றுள்ளது. அடுத்த கலந்துரையாடல் பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பிற சிவில் சமூகங்களின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நடைபெற்றுள்ளது.

இங்கு, நாட்டில் தேசிய நல்லிணக்கத்திற்கான உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் தற்போதைய வேலைத் திட்டங்கள் குறித்தும் இந்த சுயாதீன ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான உத்தேச சட்டமூலம் குறித்தும் முக்கியமாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் இணைந்திருந்த நபர்கள் அதற்கு முழுமையாக பங்களிக்கின்றமையோடு ஆலோசனைகளையும் யோசனைகளையும் முன்வைத்தனர்.

1983 - 2009 ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற மோதல்களின் போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான உண்மையைக் கண்டறிய நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்படும் ஒரு சுயாதீனமான நிறுவனமாக உண்மை, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

உத்தேச ஆணைக்குழு, பாதிக்கப்பட்ட தரப்பினரிடம் முறையாக தகவல்களைத் திரட்டல், வன்முறைகளின் போது நடந்த விடயங்களை அறிக்கையிடல், கடந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தி எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருக்க பரிந்துரை வழங்குதல் மற்றும் மோதலுக்குப் பிந்தைய இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும்

(9ஆம் பக்கம் பார்க்க)

# புதிய பொலிஸ்மா அதிபர் நியமனத்தின் தவறை அரசாங்கம் திருத்த வேண்டும்!

## விஜித ஹேரத் எம்.பி. நாடாளுமன்றத்தில் வலியுறுத்தல்



"புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் அரசமைப்பு பேரவையின் முறைமைக்கு எதிரானது. ஆகவே இந்த நியமனத்தில் இடம்பெற்ற தவறை அரசாங்கம் திருத்திக் கொள்ள வேண்டும். அரச தலைவர்கள் அரசமைப்புக்கு முரணாகச் செயற்பட்டுக் கொண்டு பொது மக்களை அரசமைப்புக்கு அமையச் செயற்படுமாறு குறிப்பிடுவது வேடிக்கையானது."

– இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பிணைப் பொறுப் பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம் உள்ளிட்ட நிதித்துறையுடன் தொடர்புடைய சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"புதிய பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நியமனத்தில் அரசமைப்பு மீறப்பட்டுள்ளது. இந்த நியமனம் தொடர்பான அரசமைப்புக் கவுன்ஸில் கூட்டத்தில் ஆதரவாக 4 வாக்குகளும், எதிராக 02 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. இரண்டு உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்துக் கொள்ள வில்லை. வாக்களிப்பு நிறைவடைந்ததன் பின்னர் சபா நாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன"இந்த நியமனத்துக்கு எனது தீர்மானமிக்க வாக்கினை வழங்குவதாக" ஜனாதிபதிக்கு எழுத்துமூலமாக அறிவித்துள்ளார். இவ்வாறான முறைமை அரசமைப்புப் பேரவையில் கிடையாது.

அரசமைப்புப் பேரவையில் ஒரு நியமனம் தொடர்பில் வாக்கெடுப்புக் கோரப்படும் போது வாக்களிப்பில் சம நிலை காணப்படும் பட்சத்தில் மாத்திரமே சபாநாயகரால் வாக்களிக்க முடியும்.ஆனால் புதிய பொலிஸ்மா அதிபர் நியமன விடயத்தில் சமனற்ற தன்மையில்தான் வாக்களிப்பு காணப்பட்டுள்ளது. ஆகவே அரசமைப்பு விதிகளுக்கு முரணான வகையில்தான் சபாநாயகர் தனது தீர்மானமிக்க வாக்கைப் பயன்படுத்தியுள்ளார்.

நாட்டின் ஜனாதிபதி,பிரதமர் மற்றும் சபாநாயகர் ஆகியோர் அரசமைப்புக்கு முரணாக செயற்பட்டுக் கொண்டு நாட்டு மக்களை அரசமைப்புக்கு அமையச் செயற்பட வேண்டும் என்று குறிப்பிடுவது வேடிக்கையானது. பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் இடம்பெற்ற தவறை அரசாங்கம் திருத்திக் கொள்ள வேண்டும்." – என்றார்.

# முட்டைக்கான அதிகபட்ச விலையை நிர்ணயித்து விசேட வர்த்தமானி வெளியிடுவதற்குத் தீர்மானம்



முட்டைக்கான உச்சபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்காக, விலை நிர்ணயத்தை அடுத்த வாரம் நுகர்வோர் அதிகார சபைக்கு அனுப்புவதற்கு விவசாய அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது சந்தையில் முட்டையின் விலை கட்டுப்பாடின்றி பாரிய அளவு அதிகரித்துள்ளதாக மேற்படி கலந்துரையாடலின் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தநிலையில் எதிர்வரும் பண்டிகை காலத்தில் நுகர்வோருக்கு சாதாரண விலையில் முட்டையை வழங்குவதற்காக முட்டைக்கான உச்சபட்ச விலை நிர்ணயம் செய்யப்படவுள்ளது.

இதேவேளை, சந்தையில் முட்டையின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் வகையில், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் இந்தியாவில் இருந்து சுமார் 4 கோடி முட்டைகளை இறக்குமதி செய்வதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் பெண் ஒருவரின் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை



(கே.வசந்தன்)

வவுனியாவில் வயோதிபப் பெண் ஒருவரின் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா வைத்தியசாலையில் கடந்த நவம்பர் மாதம் 07 ஆம் திகதி புள்ளி நிறச் சட்டையுடன் வயோதிபப் பெண் ஒருவர் சிகிச்சை பெறச் சேர்க்கப் பட்டிருந்தார்.

அவருக்கான சிகிச்சைகள் வவுனியா வைத்தியசாலையில் வழங்கப்பட்டு வந்த நிலையில், நேற்றுமுன்தினம் அந்த வயோதிபப் பெண் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

சுமார் 5 அடி உயரமுடைய குறித்த வயோதிபப் பெண் யார் என இதுவரை அடையாளம் காணப்படவில்லை. அந்தப் பெண்ணின் சடலம் வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக் கப்பட்டுள்ளது.

மேற்படி பெண் தொடர்பாகத் தகவல் தெரிந்தோர் அல்லது உறவினர்கள் வவுனியா வைத்தியசாலையை அல்லது வவுனியா பொலிஸாரைத் தொடர்பு கொள் ளுமாறு பொலிஸார் மேலும் கூறினர்.

# கழிவுநீர் கால்வாயில் குதித்த 'கதிரானவத்தை குடு ராணி'

## மடக்கிப் பிடித்த மட்டக்குளி பொலிஸார்



கொழும்பு, மட்டக்குளியில் "கதிரானவத்தை குடு ராணி" என அழைக்கப்படும் 45 வயதுடைய பெண் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யுக்திய நடவடிக்கையின்போது முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 5 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸார் அந்தப் பெண்ணைக் கைது செய்ய முற்பட்டபோது அவர் அருகில் இருந்த கழிவுநீர் கால்வாயில் குதித்துள்ளார்.

பின்னர் மேலதிக பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டு அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## வவுனியாவில் அழுகிய நிலையில் முதியவரின் சடலம் நேற்று மீட்பு!



(கே.வசந்தன்)

வவுனியா, ஓமந்தை, நாவற்குளம் பகுதியில் அமைந்துள்ள நீர் நிலையில் இருந்து முதியவர் ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைவிடப்பட்ட கற்க்குவாரியாக காணப்பட்ட அந்த பகுதியில் சடலம் ஒன்று கிடக்கின்றமை தொடர்பாக அப் பகுதிக்கு சென்றவர்களால் ஓமந்தை பொலிஸாருக்குத் தகவல் தெரியப்படுத்தப்பட்டது. இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு, விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சடலம் அழுகிய நிலையில் உள்ளமையினால் சில தினங்களிற்கு முன்னராகவே இந்நபர் இறந்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஓமந்தைப் பொலிஸார் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## நான்கு மாத குழந்தை சளியால் உயிரிழப்பு!



சளி காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இரட்டைக் குழந்தைகளில் ஒரு ஆண் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

யாழ். தென்மராட்சி, மாசேரி, வரணிப் பகுதியைச் சேர்ந்த ரவிநாதன் ஆரப் என்ற நான்கு மாதங்கள் நிரம்பிய குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இரட்டைக் குழந்தைகள் சளி ஏற்பட்ட நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தன. இந்நிலையில், மேலதிக சிகிச்சைக்காக இரண்டு குழந்தைகளும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டன.

அங்கு சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் மாலை ஒரு ஆண் குழந்தை உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

நேற்றைய கூட்டத்துக்கு முழு ஆயத்தங்களுடன் அவர் சென்றிருந்தார்.

இந்த விடயத்தில் அத்துபடியான ஒருவர் இருக்கின்றார். அவர், இந்தத் தையிட்டி விகாரை அமைந்துள்ள வலி. வடக்குப் பிரதேச சபையின் தலைவராக நீண்ட காலம் இருந்த சுகிர்தன். விகாரை அமைந்துள்ள காணிப் பிரச்சினை தொடர்பான விவரங்களை ஆதியோடு அந்தமாக சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பிக்கு அவர் தயார் செய்து வழங்கியிருந்தார்.

பிறகென்ன...? தன்பாட்டுக்கு இயந்திரத் துப்பாக்கியில் இருந்து சன்னங்கள் சீறிப் பறந்த மாதிரி சரமாரியாக சிங்களத்தில் போட்டுப் பிடித்திருக்கின்றார் சார்ள்ஸ் நிர்மலநாதன்.

கூட்டத்துக்காக அழைக்கப்பட்டிருந்த தையிட்டி விகாரையின் துணை விகாரதிபதி, பிரதேசத்துக்குப் பொறுப்பான படை அதிகாரியான கேணல் தர இராணுவ அலுவலர், வழக்கமாகவே இனவாதம் கக்கும் சரத் வீரசேகர எம்.பி. என எல்லோரினதும் வாயை சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. அடைத்தார் என்று கேள்வி. தீர்மானம் அறிவிக்காமல் கூட்டம் முடிந்திருக்கின்றது.

நேற்றைய மிகுதியை இன்று எதிர்பார்க்கலாம். இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு ஒரு கூட்டத்துக்காக தமிழ் எம்.பிக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்கின்றனர். நேற்று சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. ஆரம்பித்து வைத்த முழக்கத்தை இன்று ஜனாதிபதி முன்னிலையில் சுமந்திரன் தொடர்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தையிட்டி விகாரை விடயத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் போயாவுக்குப் போயா அங்கு போய் போராட்டம் நடத்துகிறார்கள். அவையும் காத்திரமானவைதான்.

ஆனாலும், கொழும்பில் வாய்ப்புக் கிடைக்கும் போது இப்படிப் போட்டுப் பிடிப்பதுதான் பௌத்த – சிங்கள பேரினவாதத்தைச் சற்றேனும் அசைய – மிரள – வைக்கும் தந்திரமாகும்.

ஆக்ரோஷமாக இருந்தால்தான் அடாவடித்தனத்தை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்தலாம்.

தேசிய பாதுகாப்புக்கான நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவின் நேற்றைய கூட்டம் பற்றிய செய்தி 2ஆம் பக்கத்தில் விவரமாக உள்ளது.

## ஈழத்தமிழர் விடயத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கூறியதாவது:–

"ராஜீவ் காந்தி கொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட போதிலும் சாந்தன் மீளவும் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டார்.

எனினும், இலங்கைக்கு அவரை மீள அனுப்புவதற்கான நடவடிக்கைகள் தாமதமாகியிருந்த நிலையில் மீளவும் வழக்குத் தொடுத்ததால் விடுதலை உறுதி செய்யப்பட்டு ஈழத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த நிலையில் திடீரெனச் சாந்தன் உயிரிழந்தார்.

இதனால் ஈழ தேசத்துக்கு உயிரோடு வருவதற்குக் காத்திருந்த சாந்தன் சடலமாகவே கொண்டு வரப்பட்டார். சாந்தன் என்னிடம் பேசுகின்றபோது தான் ஈழத்துக்குச் சென்றால் தனக்கு மக்கள் எப்படியெல்லாம் வரவேற்புக் கொடுப்பார்கள் என்று வந்து பாருங்கள் எனச் சொல்லியிருந்தார்.

ஆனால், உயிர் இல்லாமல் அவர் கொண்டு வரப்பட்டபோது வீதிகள் எங்கும் மக்கள் திரண்டு கண்ணீர்மல்க தமது அஞ்சலியைச் செலுத்தியிருந்தனர். அவர் இறந்தாலும் கூட அவர் கொண்ட கொள்கையையும், அவரையும் மக்கள் எந்தளவுக்கு நேசிக்கின்றார்கள் என்பதைக் காணக் கூடியதாக இருந்தது.

இந்த நாட்டுக்கு வரவேண்டும் என்றும், தனது தாயாரைப் பார்க்க வேண்டும் என்றும் சாந்தன் விரும்பினார். தனது தாயாரின் கையால் ஒருபிடி சோறு சாப்பிட வேண்டும் என்பதுதான் சாந்தனின் இறுதி ஆசையாக இருந்தது.

சாந்தனுடன் விடுவிக்கப்பட்ட மற்றைய மூவரும் இலங்கைக்கு வருவதற்கு அச்சப்பட்டு தாங்கள் விரும்புகின்ற நாட்டுக்கு அனுப்பி வைக்குமாறு கோரியுள்ளனர். உண்மையில் தற்போதுள்ள சிறப்பு முகாமில் அவர்களும் தொடர்ச்சியாகத் தடுத்து வைக்கப்பட்டால் அவர்களுக்கும் பெரிய ஆபத்து ஏற்படும் அச்சம் உள்ளது.

ஆகையினால் அவர்களை அங்கிருந்து வெளியில் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, இங்குள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் இதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனக் கோருகின்றேன்.

குறிப்பாக தமிழ்த் தேசியத்துடன் பயணிக்கும் அரசியல் கட்சிகளை இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கின்றேன். அங்கு இந்த மூவர் மட்டுமல்லாது ஈழத்தைச் சேர்ந்த பலர் இருக்கின்றபோது இந்தச் சிறப்பு முகாமை பார்வையிட்டு இலங்கை – இந்திய அரசுகளுடன் பேச்சு நடத்த வேண்டும்.

அங்குள்ளவர்களின் விடுதலைக்கு உண்மையிலையே முயற்சி எடுங்கள். இனியும் நீங்கள் அமைதியாக இருக்கக் கூடாது. உங்களால் இதனைச் செய்ய முடியும். அந்த முயற்சி திருவினையாக்கும்.

சிறையை விடக் கொடுமையானது அந்தச் சிறப்பு முகாம். அந்தச் சிறப்பு முகாம் மரண கொட்டகை போல்தான் உள்ளது. எனவே, அங்குள்ள மூவரையும் காப்பாற்ற நீங்கள் அங்கு வாருங்கள் பேசுங்கள்.

அவர்களது விடுதலைக்காக இங்குள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், எம்.பிக்கள், இந்தியாவிலுள்ள தமிழ்த் தேசிய உணர்நாளர்கள் என அனைவரும் சேர்ந்து குரல் கொடுப்போம் போராடுவோம்.

சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டாலும் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றவர்களை வெளியில் விடுவதற்கான முயற்சிகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை.

இந்திய மத்திய அரசு மட்டுமல்ல தமிழகத்தில் ஆட்சியில் இருக்கும் தி.மு.க. அரசு கூட அக்கறை கொண்டிருக்கவில்லை. குறிப்பாக தமிழகத்தில் ஆட்சியிலுள்ள தி.மு.க. என்றைக்குமே ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக இருந்தது என்று சொல்ல முடியாது. அதிலும் எதிராகத்தான் இருந்தது என்று சொல்லலாம்.

ஈழத்தில் போர் உச்சக் கட்டத்தின்போது போராட்டத்தை நசுக்குவதற்காக தி.மு.கவினரே போராட்டங்களை நடத்தினார்கள். தி.மு.க. நினைத்திருந்தால் முள்ளிவாய்க்கால் படுகொலையை நிறுத்தி இருக்கலாம்.

குறிப்பாக தமிழகத்துக்குப் பிரதமர் வருகின்றார் என்றால் சிறப்பு முகம் மட்டுமல்லஏனையமுகாம்களிலிருந்தும் இலங்கைத் தமிழர் வெளியே வர முடியாது. அதிலும் கையெழுத்துப் போட வேண்டும் இல்லாவிட்டால் பழிவாங்கல் நடவடிக்கை நடக்கும்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் தி.மு.க., அ.தி.மு.க. என பிரதன இரண்டு கட்சிகளும் தமிழகத்தில் மாறி மாறி ஆட்சியில் இருந்தாலும் அது தமிழர்களுடைய ஆட்சி அல்ல. எனவே நடந்தவை இருக்க இனிமேல் அப்படி நடக்காமல் இருக்கவே பார்க்க வேண்டும். அங்குள்ள சிறப்பு முகாம் எந்தளவுக்கு ஆபத்தானதோ அதே போல்தான் அங்குள்ள அகதி முகாம்களும் ஆட்டு, மாட்டு கொட்டில்களைவிட மிக மோசமாக இருக்கும்.

இதேவேளை, இந்திய மத்திய அரசோ, தமிழக அரசோ நினைத்திருந்தால் சாந்தனின் இறுதி ஆசையை நிறைவேற்றி இருக்கலாம். ஆனால், அது நடைபெறாமல் போனதற்கும் சாந்தனின் உயிரிழப் புக்கும் தி.மு.க. அரசுக்கு மிகப் பெரிய பொறுப்பு இருக்கின்றது. இதற்கு எதிராக வழக்குத் தொடர்வது குறித்தும் ஆராய்கின்றோம்.

மேலும் ராஜீவ் காந்தி விவகாரத்தை வைத்து சாந்தன் உள்ளிட்டவர்களை இந்திய அரசு பழிவாங்கியும் இருக்கலாம். பழி தீர்த்தும் இருக்கலாம். இந்தியாவில் தமிழ்த் தேசிய உணர்வாளர்களைத் தவிர ஏனைய பலரிடமும் பழிதீர்க்க வேண்டுமென்ற எண்ணமே இருந்தது.

குறிப்பாக ஈழத்தமிழர் விடயத்தில் இந்தியா இரட்டை வேடம் போடுகின்றது. அதாவது ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு என வெளியில் காட்டிக் கொண்டாலும் உண்மையிலையே ஈழத் தமிழர்களுக்கு எதிராகவே உள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரையில் இனியும் ஆதரவாக இருக்காது.

புலிகள் என்ற பெயரில் இலங்கை – இந்தியத் தமிழர்களை ஒடுக்குவதைத்தான் இந்திய அரசு தொடர்ந்தும் செய்து வருகின்றது. ஈழத் தமிழர்களுக்காக இந்தியா ஒருபோதும் நிற்காது என்பதுடன் உதவி செய்யவும் மாட்டாது.

எனவே, இந்தத் தமிழ் இனத்தையும் மக்களையும் மண்ணையும் காப்பதற்கு அனைவருமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்." – என்றார்.

## தாய்ப்பால் புரைக்கேறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்றுள்ளது.

பலாங்கொடைஆதாரவைத்தியசாலையில் நடத்தப்பட்ட பிரேத பரிசோதனையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பின்னவள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## மத்திய மலைநாட்டில் மீண்டும் வறட்சியான காலநிலை

# மவுஸ்சாக்கலை, காசல்ரீ நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருகின்றது

**(மஸ்கெலியா நிருபர்: செ.தி.பெருமாள்)**

மத்திய மலை நாட்டின் நீர் ஏந்து பகுதிகளில் சுமார் ஒரு மாத காலமாக கடும் வறட்சியான காலநிலை நிலவிய நிலையில், மவுஸ்சாக்கலை மற்றும் காசல்ரீ நீர் தேக்கங்களின் நீர்மட்டம் அதன் கொள்ளளவை விட வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

நேற்றுக் காலை 08.00 மணியளவில் மவுஸ்சாக்கலை மற்றும் காசல்ரீ நீர் தேக்கங்களின் நீர்மட்டம் வெளியேற்ற மட்டத்திலிருந்து 20 அடி குறைந்துள்ளதாக நீர் தேக்கங்களுக்கு பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

தேசிய நீர் மின்சார அமைப்புக்கு சொந்தமான லக்ஷபான நீர் மின் நிலைய வளாகத்தின் கீழ் உள்ள கெனியன், லக்ஷபான, நியூ லக்ஷபான, விமலசுரேந்திர, பொல்பிட்டிய மற்றும் போட்லேண்ட் ஆகிய மின் உற்பத்தி நிலையங்களுக்கான பிரதான நீர் விநியோகம் மவுஸ்சாக்கலை மற்றும் காசல் நீர்த்தேக்கங்கள் ஆகும்.

இதே போல் மத்திய மாகாணத்தில் உள்ள அனைத்து நீர் தேக்கங்களின் நீர் மட்டங்களும் வெகுவாக குறைந்து வருகின்றன.

தொடர்ந்து வறட்சியான காலம் தொடரும் பட்சத்தில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு மற்றும் மின்சார உற்பத்தி குறைய வாய்ப்புள்ளது என அந்த அதிகாரி கூறினார்.

## இலங்கை, இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு, சிறையிலிருந்து விடுதலையான சாந்தன் கடந்த 28ஆம் திகதி சென்னை ராஜீவ் காந்தி அரச வைத்திய சாலையில் மாரடைப்பால் காலமானார். அவரது புகழுடல் நேற்றுமுன்தினம் யாழ். வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்ல வளாக மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

சாந்தனுக்கு நேற்று நாடாளுமன்றத்தில் அஞ்சலி செலுத்தி உரையாற்றும் போதே தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ராஜிவ் காந்தி கொலை வழக்கில் சந்தேகநபகராகக் கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட சாந்தன் பின்னர் 2022ஆம் ஆண்டு திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டார்.

விடுதலை செய்யப்பட்ட ஏழு பேரில் 3 பேர் இந்தியக் குடியுரிமை கொண்டவர்கள். இந்தியக் குடியுரிமை கொண்டவர்களாக இருந்தமையால் அவர்கள் இயல்பு வாழக்கையை வாழத் தொடங்கினர்.

ஆனால், இலங்கைக் குடியுரிமையை கொண்ட சாந்தன் உட்பட 4 பேர் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டனர்.

இவர்கள் இலங்கைப் பிரஜைகள் என்பதை வெளிப்படுத்த வேண்டுமென இவர்களது குடும்பத்தினர் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர். அத்துடன், வெளியுறவு அமைச்சருக்கு மூன்றுமுறை கடிதங்களையும் எழுதியிருந்தனர்.

ஆனால், இலங்கை அரசின் அசமந்தப் போக்கு காரணமாக கடந்த ஒன்றரை வருடங்களாக இவர்களை இலங்கைக்கு அழைத்துவரும் இராஜதந்திர நகர்வுகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. இதனால் சாந்தன் உயிருடன் தாயகம் திரும்ப முடியாது போனது.

தமிழ் மக்கள் சார்பாகச் சாந்தனுக்கு அஞ்சலி செலுத்துகின்றோம். இலங்கை, இந்திய அரசுகள் நினைத்திருந்தால் சாந்தன் இலங்கை திரும்பி தமது குடும்பத்தினருடன் வாழ்ந்திருக்க முடியும்.

இந்திய வெளிவிவகார அமைச்சும் தமிழர்கள் தொடர்பான பிரச்சினைகளில் எவ்வித தீர்மானங்களையும் எடுப்பதில்லை. இலங்கை, இந்தியா ஆகிய இரண்டு நாடுகளும் சாந்தனின் இறப்புக்குப் பொறுப்புக்கூற வேண்டும்.

ஏனைய மூவரையும் விரைவாக இலங்கை அழைத்துவர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்." - என்றார்.

## தேர்தலில் ராஜபக்ஷ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

சமகால நிலைமை தொடர்பாக யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாதியற்ற நபராக இருந்தவர் வேறு யாரும் இல்லை. இந்த பஸில் ராஜபக்ஷ தான். அவரை வரவேற்பதற்காகச் சிலர் விமான நிலையம் சென்றுள்ளனர். 2022ஆம் ஆண்டு நடைபெற்ற அரகலய போராட்டத்தின்போது நாட்டைவிட்டு ஓடுவதற்கு விமானங்கள் இல்லாமல் அங்குமிங்கும் ஓடித் திரிந்த நபர்தான் பஸில்.

தமது அரசு தோல்வியுற்றதை அறிந்து நாட்டை விட்டு ஓடியவரே இந்த பஸில் ராஜபக்ஷ. அவர் நாடு திரும்பியமையால் எமது நாட்டுக்கு ஒன்றும் ஆகப் போவதில்லை. ராஜபக்ஷக்கள் எமது நாட்டை நாசமாக்கியவர்கள். இதை நான் கூறவில்லை, இந்த நாட்டில் உள்ள உயர் நீதிமன்றமே தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் வேறு யாரும் இல்லை, இந்த ராஜபக்ஷ குடும்பமே பொறுப்பு.

பஸில், மஹிந்த, கோட்டபாய மூவரும் பொருளாதாரக் கொலையாளிகளாவர்.

பஸில்கடந்தகாலங்களில்விளையாடிய விளையாட்டை இனியும் விளையாட முடியாது. இது பஸிலின் கடைசித் தேர்தலாக இருக்கலாம். இது ராஜபக்ஷக்களின் இறுதித் தேர்தலாக இருக்கலாம்.

இது ரணில் விக்கிரமசிங்கவுக்கு இறுதித் தேர்தல் மட்டுமல்ல சாவுமணியும் கூட.

இவர்கள் மக்கள் மத்தியில் செல்ல முடியாது. மக்களால் இவர்கள் விரட்டியடிக்கப்படுவார்கள்.

ராஜபக்ஷக்கள் எமது நாட்டை நாசமாக்கியவர்கள், எமது நாட்டை கடன் பொறிக்குள் தள்ளியவர்கள், நாட்டில் இனவாதத்தைத் தோண்டியவர்கள், 2019 ஆம் ஆண்டு தேர்தலின்போது எல்லாவிதமான இனவாதத்தையும் தூண்டி, பல்வேறு வகையான சித்து விளையாட்டுக்களையும் விளையாடி ஆட்சி அதிகாரத்துக்கு வந்தவர்கள்.

இவர்களுக்கு மக்கள் இனிவரும் தேர்தலில் நல்ல பாடம் புகட்டுவார்கள். இவர்கள் அரசியலில் இருந்து விரட்டியடிக்கப்பட வேண்டியவர்கள். இவர்களுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும். அதனைத் தேசிய மக்கள் சக்தி செய்யும்." - என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நீதி செய்யுங்கள்!

"இலங்கை - இந்திய அரசாங்கங்களின் அக்கறையின்மையினாலேயே - பொறுப்பற்ற போக்கினாலேயே - சாந்தனின் உயிர் பறிக்கப்பட்டுள்ளது" - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மல நாதன் கூறியிருக்கின்றார்.

சாந்தனின் உயிர் பறிக்கப்பட்டமைக்கு இந்திய மத்திய, தமிழக மாநில அரசுகளும் இலங்கை அரசும் காரணமா என்பது ஆராயப்பட வேண்டியதுதான்.

ஆனால், 33 ஆண்டுகள் சிறையில் போராட்டம் நடத்தி விடுதலையான சாந்தன் உட்பட நான்கு இலங்கைத் தமிழர்களையும் அவர்களின் எஞ்சிய காலத்தில் அவர்கள் விரும்பிய இடத்தில் வாழ்வதற்கு இந்த அரசுகள் உதவி இருக்க முடியும். தமது சிவப்பு நாடா நிர்வாகக் கெடுபிடிகளைச் சற்றுத் தளர்த்தி, மனிதாபிமானத்துடன் நடந்திருந்தால் இந்த எஞ்சிய காலத்தைத் தத்தமது இடங்களில், தங்களின் நெருங்கிய உறவுகளுடன் கழிக்கும் இறுதிப் பேறையாவது அவர்களுக்கு நிறைவு செய்து கொடுத்திருக்க முடியும்.

இந்த அரசுகள் கூட்டுச் சேர்ந்து சாந்தனைக் கொன்றன என்று கூற முடியாவிட்டாலும், தமது கடைசிக் காலத்தில், 33 ஆண்டுகளாகத் தான் நேரில் காணாத தாயை நேரில் கண்டு, அந்த அபலைத் தாயின் கையால் ஒருவாய் சோறு உண்ண அந்த ஆத்மாவுக்கு ஒரு வாய்ப்பு - வரலாற்றுப் பேறு - கிடைத்திருக்கும், அதை தடுத்து விட்டன என்று கூறலாம். அதை அழித்த முழுப் பொறுப்பும் இந்திய மத்திய, மாநில அரசுகளையும், இலங்கை அரசையுமே சாரும்.

தாயைச் சந்திக்க - நேரில் காண - நோயின் வலியோடு, இறுதி நேரம் வரைப் போராடிய சாந்தனின் மரணம் ஈழத் தமிழர் தேசத்தில் மட்டுமல்லாமல், தமிழகத்தில் கூட உணர்வெழுச்சியைத் தூண்டியிருக்கின்றமை உண்மை.

சாந்தனின் புகழுடல் இலங்கைக்கு எடுத்து வரப்படும் முன்னர், தமிழகத்தின் ஆஸ்பத்திரியில் இருந்து வெளியே மக்கள் அஞ்சலிக்கு எடுத்து வர அனுமதிக்கப்பட்டிருந்தால், தமிழக மக்களின் உணர்வெழுச்சி பீறிட்டு வெளிப்பட்டிருக்கும்.

அதன் அக்கினித் தகிப்பை, இந்தியத் தேசியத் தேர்தல்கள் நெருங்கும் இச்சமயத்தில் மத்திய - மாநில அதிகாரத் தரப்புகள் எதிர்கொள்ள முடியாமல் பொசுங்கிக் கருகி இருக்கும்.

அதனால்தான் சாந்தனின் புகழுடலை இலங்கைக்கு விமானம் ஏற முன்னர், தமிழகத்தில் வெளியில் பொதுப் பார்வைக்கும் அஞ்சலிக்கும் அனுமதிக்க விடக்கூடாது என்பதில் தமிழக அரசு அதீத கவனத்துடன் இருந்தது எனத் தெரிகின்றது.

சாந்தன் விவகாரம் முடிந்து விட்டது. 33 ஆண்டுகள் இந்தியச் சிறைகளில் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்த சாந்தன், இப்போது எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அருகில், ஏனைய மாவீரர்களுக்கு சமீபமாக, அமைதியாக உறங்குகின்றார். அந்த மீளா உறக்கத்துக்கு அனுமதித்து, விடை தந்து, பிரயாணிப்பது ஒன்றே தமிழினத்தினால் இன்று அவருக்குத் தரக்கூடியது. அதைத் தந்து காத்திருக்கின்றோம்.

இனி ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையான மற்றைய மூன்று ஈழத் தமிழர்கள் விடயத்திலும் இந்திய மத்திய - மாநில அரசுகள் என்ன செய்யப் போகின்றன? சாந்தனைப் போல அவர்களையும் உயிரற்ற உடலங்களாகத்தான் இலங்கைக்கு அனுப்புவோம் என்ற கொடூர - குரூர - எண்ணத்தில்தான் அவை இருக்கின்றனவா?

இந்த விடயத்தில் கொழும்புடன் சேர்ந்து அந்த அரசுகள் - இந்திய மத்திய, தமிழக மாநில அரசுகள் - அந்த மூவரின் இறப்புச் செய்தி வரும் வரையில் அவர்களை தாயகம் திரும்ப அனுமதிக்காது முகாம் சிறைகளுக்குள் முடக்கி வைக்கப் போகின்றனவா? காலம் பதில் கூறும்.

அதேசமயம் நேற்று நாடாளுமன்றத்தில் இவ்விவகாரத்தை ஒட்டி உரையாற்றிய சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. இன்னொரு விடயத்தையும் மன வேதனையுடன் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

அது - "ஈழத் தமிழர்கள் தொடர்பான பிரச்சினைகளில் இந்திய வெளிவகாரத் துறை எவ்வித தீர்மானங்களையும் எடுப்பதில்லை" - என்ற விசனக் கூற்றுதான்.

மிக உண்மையான - ஈழத் தமிழர்களின் மனதை நெருடுகின்ற - இந்தக் கூத்துக் குறித்து இப்பத்தியில் தனியாக ஆராய்வோம்.

அப்போது இந்தியாவின் உண்மை முகத்தை நாம் காணக்கூடியதாக இருக்கும். அதன் முகத்திரை, அகலும். உண்மை புரியும்.





# புதுச்சேரியில் மாயமான சிறுமி வாய்க்காலில் சடலமாக மீட்பு

## பொதுமக்கள் வீதி மறியல்

புதுச்சேரியில் மாயமான 9 வயது சிறுமி, வீட்டின் அருகே உள்ள வாய்க்காலில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. இதனால் வீதி மறியலில் ஈடுபட்ட பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது.

புதுச்சேரி முத்தியால்பேட்டை சோலைநகர் பகுதியை சேர்ந்த தம்பதியரின் இரண்டாவது மகளுக்கு 9 வயது. அரசுப் பள்ளியில் 5-ஆம் வகுப்பு படித்து வந்தார். இதனிடையே கடந்த 2 ஆம் திகதி பிற்பகல் வீட்டுக்கு வெளியே விளையாடிக்கொண்டிருந்த நிலையில் சிறுமி திடீரென மாயமானார்.

மாயமான சிறுமியை பெற்றோரும், உறவினர்களும் பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. இதையடுத்து முத்தியால்பேட்டை பொலிஸ் நிலையத்தில் குடும்பத்தினர் புகார் அளித்தார். பொலிஸார் வழக்குப் பதிவு செய்து சிறுமியைத் தீவிரமாகத் தேடினர்.

எனினும், எந்த தகவலும் கிடைக்கவில்லை. சிறுமியை விரைந்து மீட்கக் கோரி குடும்பத்தினரும், உறவினர்களும் முத்தியால்பேட்டை மணிக்கூண்டு அருகே நேற்று முன்தினம் வீதி மறியலில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், நேற்று சோலை நகர் பகுதியில் அம்பேத்கர் வீதி - கண்ணதாசன் வீதி இடையே செல்லும் கழிவுநீர் கால்வாயில் சாக்கு மூட்டை மிதப்பதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து முத்தியால்பேட்டை பொலிஸார் அங்கு விரைந்து சென்று பார்த்தபோது, சிறுமியின் கை, கால்கள் கட்டப்பட்டு வேட்டி துணியால் சுற்றி கால்வாயில் வீசப்பட்டிருந்தது தெரியவந்தது. சிறுமியின் தந்தையும் கால்வாயில் மிதப்பது தனது மகள்தான் என்பதை உறுதி செய்தார்.

கால்வாயில் இருந்து சிறுமியின் உடல் கிடைத்ததையடுத்து, அப்பகுதியில் பொதுமக்கள் உறவினர்கள் என நூற்றுக்கணக்கானோர் திரண்டனர். சிறுமியின் உடலை எடுத்துச் சென்ற பொலிஸார் , உடலை பார்க்க யாரையும் அனுமதிக்கவில்லை. இதனால் பொதுமக்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதையடுத்து பொலிஸார் சிறுமியின் உடலை பிரேதப் பரிசோதனைக்காக கதிர்காமம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் சிறுமி கொலை செய்து கால்வாயில் வீசப்பட்டிருப்பது தெரியவந்தது. சந்தேகத்தின் பேரில் பொலிஸார் 3 பேரை பிடித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னார், நெடுந்தீவு உள்ளிட்ட பகுதிகளில் எல்லை தாண்டி மீன்பிடிக்க செல்ல வேண்டாம்

## மீனவர் நலத்துறை மீண்டும் எச்சரிக்கை



ஒவ்வொரு நாளும் துயரத்துடன் கடலுக்கு சென்றுவரும் மீனவர்கள் மீது அக்கறை கொண்டு அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகையால் இராமேசுவரம் -மண்டபம் மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என மீனவர் நலத்துறை மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், பாக்ஜலசந்தி கடல் பகுதியில் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் இராமேசுவரம், மண்டபம் பகுதி மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என கூறி இலங்கை கடற்படையினர் அடிக்கடி சிறை பிடித்து வருகின்றனர். மேலும் படகுகளை பறிமுதல் செய்வதுடன் மீனவர்களுக்கும் தண்டனை விதித்து வருகின்றனர்.

இதனால் வாழ்வாதாரம் இழந்த ஏராளமான மீனவர்கள் மாற்று தொழிலை நாடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மீன்பிடி தொழிலை சார்ந்துள்ள லட்சக்கணக்கானோரும் வேலையிழந்து தவித்து வருகிறார்கள். ஒவ்வொரு நாளும் துயரத்துடன் கடலுக்கு சென்றுவரும் மீனவர்கள் மீது அக்கறை கொண்டு அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து வலுத்து வருகிறது.

மீனவர்கள் சிறை பிடிப்பதை கண்டித்தும், மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் இராமேசுவரம், மண்டபம் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதே போன்று இலங்கையில் மன்னார், பேசாளை, நெடுந்தீவு உள்ளிட்ட பகுதி மீனவர்களும் தற்போது இலங்கையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால், இராமேசுவரம், மண்டபம் மீனவர்கள் நடுக்கடலில் மீன்பிடிக்கும் போது தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படுவதை தடுக்கும் வகையில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அதிகாரிகள் இராமேசுவரம், மண்டபம் மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தலை மன்னார், பேசாளை, நெடுந்தீவு உள்ளிட்ட பகுதி மீனவர்களும் தற்போது இலங்கையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக இராமேசுவரத்தில் சிறிய படகுகள் மட்டுமே மீன்பிடிக்க சென்றுள்ளது. பெரிய படகுகள் மீன்பிடிக்க செல்லவில்லை என்பது குறிப்பிடதக்கது.

இலங்கை கடற்படையை கண்டித்து தமிழக மீனவர்கள் போராட்டம் நடத்தி வந்த நிலையில், தற்போது தமிழக மீனவர்களை கண்டித்து இலங்கை மீனவர்கள் போராட்டத்தில் குதித்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





# பாலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் மீண்டும் துப்பாக்கி பிரயோகம்

இஸ்ரேல் – ஹமாஸ் போரானது தீவிரமடைந்துவரும் நிலையில் காசாவில் பாலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய துப்பாக்கிச்சூடு தாக்குதலானது சர்வதேச ரீதியில் பெரும் அதிர்ச்சியை தோற்றுவித்துள்ளது.

இந்த நிலையில் இரண்டாவது முறையாக நேற்று துப்பாக்கிச்சூடு தாக்குதலை இஸ்ரேல் மேற்கொண்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேல் – காசா போரில் இதுவரை சுமார், 30 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் உயிரிழந்துள்ளனர் என உலக சுகாதார ஸ்தாபனம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதன்படி போரை தடுக்க ஐ.நா பொதுச்சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதும், இஸ்ரேல் அதை புறக்கணித்தோடு, ஐ.நா. பாதுகாப்பு அமைச்சகம் போர் நிறுத்த தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது , அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி தீர்மானத்தை இரத்து செய்ய வைத்திருந்தது.

இந்நிலையில், போர் நிறுத்தத்தை வலியுறுத்தியும், சுதந்திரமான பாலஸ்தீனத்தை வலியுறுத்தியும் இஸ்லாமிய நாடுகளில் போராட்டங்கள் தீவிரமடைந்து வருகின்றன.

சமீபத்தில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி, இஸ்ரேலுக்கு ஆயுத உதவி செய்த அமெரிக்காவின் விமானப்படையை சேர்ந்த வீரர் ஒருவர் தற்கொலை செய்துக்கொண்டார்.

இந்தச் சம்பவம் உலகம் முழுவதும் பாலஸ்தீன விடுதலை முழக்கங்களை அதிகரிக்க செய்திருந்தது.

இந்த நிலையில் கடந்த 4 நாள்களுக்கு முன்னர் காசாவில், இஸ்ரேலிய இராணுவம் திடீரென கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் இதன் தொடர்ச்சியாக நேற்றும் துப்பாக்கிச்சூட்டை இஸ்ரேலிய இராணுவம் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாலைதீவுக்கு இராணுவ உதவி வழங்க சீனா புதிய ஒப்பந்தம் மேற்கொண்டது



இந்திய வீரர்களை வெளியேற்றுவதற்கு காலக்கெடு விதிக்கப்பட்டுள்ள நிலையில், மாலைதீவுக்கு இராணுவ உதவி வழங்க சீனா புதிய ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, சீனாவின் இராணுவ உதவியை இலவசமாக வழங்குவது மற்றும் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் வகையிலான இந்த ஒப்பந்தத்தில், மாலைதீவு பாதுகாப்புத் துறை அமைச்சர் முகமது காசன் மவுமூன், சீனாவின் சர்வதேச இராணுவ ஒத்துழைப்பு அலுவலக துணை இயக்குநர் மேஜர் ஜெனரல் ஜாங் பாவ்கன் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர் என மாலைதீவு பாதுகாப்புத்துறை அமைச்சகம் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளது.

எனினும் ஒப்பந்தத்தில் உள்ள அம்சங்கள் குறித்த விவரங்கள் வெளியிடப்படவில்லை.

மாலைதீவில் கடந்த ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் இந்திய ஆதரவு ஜனாதிபதியாக இருந்த இப்ராஹிம் முகமது சோலி தோல்வியடைந்தார்.

அவரை பி.என்.பி. கட்சியை சேர்ந்த முகமது முய்ஸ் வீழ்த்தி வெற்றி பெற்று ஜனாதிபதியானார்.

முகமது முய்ஸ் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டதோடு சீனா ஆதரவாளராகவும் இருந்து வந்துள்ளார்.

இவர் தனது தேர்தல் பிரசாரத்திலேயே தான் வென்றால் மாலைதீவில் உள்ள இந்திய இராணுவ வீரர்களை வெளியேற்றுவேன் என்று கூறி பிரசாரம் செய்து வாகை சூடியுள்ளார்.

அதேபோல் வெற்றி பெற்ற அவர் அங்குள்ள இந்திய இராணுவ வீரர்களை வெளியேறும்படி கூறியுள்ளார்.

# உண்மை, ஒற்றுமை, நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுச் சட்டம் தொடர்பில் ஆராய்வு

(08ஆம் பக்கம் தொடர்ச்சி)

ஒரு பாரபட்சமற்ற அமைப்பாகப் பயன்படுத்துவது இதன் நோக்கமாகும்.

1983 - 2009 ஆண்டுக்கு இடையிலும் அதற்குப் பின்னரும் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய இந்த ஆணைக் குழு சட்டமூலமொன்றைத் தயாரிக்கவுள்ளது. முன்மொழியப்பட்ட சட்டத்தை உருவாக்கும் செயல்முறையில் கவனம் செலுத்துவதுடன், மோதல் நடைபெற்ற பகுதிகளுக்கு களப்பயணங்கள் நடத்துதல் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல் மற்றும் கருத்துக்களைப் பெறுதல் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினரை இணைத்துக்கொள்வதற்கான மூலோபாயங்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

2016 - 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்பட்ட ஆலோசனை செயலணியினால் இந்த வரைவு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆலோசனைப் பணிகள் மற்றும் கடந்த காலத்திலும் உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக் கால செயலகத்தால் பங்குதாரர்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனை மற்றும் தற்பொழுது மேற்கொள்ளப்படும் ஆலோசனைப் பணிகள் குறித்தும் இதன்போது விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

வினைத்திறனான நல்லிணக்கச் செயன்முறை மற்றும் நியாயத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்குள் ஓர் ஒருங்கிணைப்பு பொறிமுறையொன்றின் அவசியத்தையும் இந்தக் கலந்துரையாடல்கள் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனைகள் மற்றும் கலந்துரையாடல்களின் மூலம் பெறப்பட்ட பல யோசனைகள் ஏற்கனவே சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் விரிவாக கலந்தாலோசிக்கப்பட்ட பின்னர் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டது.

வண. கழுபான பியரத்தன தேரர், கலாநிதி ஜெஹான் பெரேரா, கலாநிதி ஜோ விலியம், கலாநிதி தயானி பனாகொட, விசாகா தர்மதாச, வீ. கமலதாச உள்ளிட்டவர்களுடன் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பிலான பரந்த செயற்பாடுகள் மற்றும் விருப்பத்துடன் செயலாற்றும் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகம் சார்பில் அதன் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசங்க குணவன்ஸ மற்றும் கொள்கைப் பிரிவின் தலைவர் கலாநிதி சி.வை.தங்கராசா ஆகியோரும் கலந்துகொண்டனர்.













# ‘வடக்கின் பெரும்போர்’ நாளை ஆரம்பம் ஊடகங்களைப் புறக்கணித்து ஏற்பாடுகள்

வடக்கின் பெரும்போர் துடுப்பாட்ட போட்டி நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில் தென்னிலங்கை தொலைத் தொடர்பு வலையமைப்பு நிறுவனம் ஒன்றின் நடவடிக்கையால் ஊடகங்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளன.

யாழ்பாணம் பரியோவான் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான 117 வருட பாரம்பரியத்தைக்கொண்ட வடக்கின் பெரும்போர் துடுப்பாட்டப் போட்டியில் இரு கல்லூரி வீரர்கள் ஊடகங்கள் முன்னிலையில் அறிமுகப்படுத்தப்பட்டு, போட்டிகளில் பார்வையாளர்கள் பின்பற்றவேண்டிய விதிமுறைகள் தொடர்பில் இரு கல்லூரி அதிபர்களாலும் அறிவிக்கபடுவது வழமையானது.

எனினும் இம்முறை வழமைக்கு மாறாக வடக்கின் பெரும்போர் குறித்து ஊடகங்களுக்கு எதுவித அறிவிப்புகளும் விடுக்கப்படவில்லை. அத்தோடு இரு கல்லூரி அணித் தலைவர்களும் இணைந்து வெற்றிக் கிண்ணத்தினை ஊடகங்கள் முன் அறிமுகப்படுத்தும் நிகழ்வுகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

மேலும் ஊடகங்களுக்கு அறிவிக்கும் பொறுப்பை யாழ்.மத்திய கல்லூரி பொறுப்பெடுத்தபோதும் ஊடகங்களுக்கு எதுவிதமான அறிவிப்புகளும் வழங்கப்படவில்லை. சம்பந்தப்பட்டவர்களை ஊடகங்கள் தொடர்புகொண்ட போதும் அவர்கள் பொறுப்பற்ற பதில்களையே வழங்கியுள்ளனர்.

இந்தப் போட்டிகளுக்கு அனுசரணை வழங்கும் தென்னிலங்கை தொலைத் தொடர்பு வலையமைப்பு நிறுவனம் தனது விளையாட்டு செய்திகள் அடங்கிய இணையத்தளத்தை பிரபல்யமாக்கும் முனைப்போடு பிரதான ஊடங்களைப் புறக்கணித்துள்ளது.

இந்தத் தென்னிலங்கை தொலைத் தொடர்பு நிறுவனம் ‘பொன் அணிகளின் போர்’ துடுப்பாட்ட போட்டிகளின் போதும் ஊடகங்களை திட்டமிட்டு புறக்கணித்தது.

போட்டிகளுக்கு அனுசரணை வழங்குபவர்கள் தங்கள் நலன்களுக்காக 117வருடபாரம்பரியத்தை மாற்றுவதற்கு இரு கல்லூரி நிர்வாகங்களும் துணைபோக்கூடாது என மூத்த ஊடகவியலாளர்கள் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வழமையாக வீரர்கள் அறிமுகவிழா ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டு ஊடகங்களிலும் வடக்கின் பெரும்போர் செய்திகள் முக்கியத்துவமளித்து பிரசுரமாகின்றபோதும் இம்முறை வடக்கின் பெரும் போர் சம்பந்தமான செய்திகளை ஊடகங்கள் வாயிலாக அறியமுடியவில்லை என்றும், வடக்கின் பெரும்போர் சோபையிழந்துள்ளதாக கிரிக்கெட் ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் இரு கல்லூரி பழைய மாணவர் சங்கங்களும் தலையிட்டு வடக்கின் பெரும்போர் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும் எனவும் கிரிக்கெட் ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை

நாவலப்பிட்டி ரயில் நிலையத்தில் ரயில்வே ஊழியர்களால் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இருவர் தாக்கப்பட்டனர் என கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் இருந்து பதுளை நோக்கி பயணித்த பொடி மெனிக்கே ரயிலில் பயணித்த இரண்டு இங்கிலாந்து பிரஜைகளே இந்தச் சம்பவத்தை எதிர்கொண்டுள்ளனர்.

கண்டி ரயில் நிலையத்தில் இருந்தே இவர்கள் ரயிலில் ஏறியுள்ளனர்.

ரயிலின் இரண்டாம் வகுப்புக்கான பயணச்சீட்டுகளை பெற்றுக்கொண்டு, முதலாம் வகுப்பில் பயணித்தமையால், அவர்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர் என ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் என்.எம்.ஜே. இதிபொல தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன கருத்து தெரிவிக்கையில். இரு வெளிநாட்டவர்களையும் ரயிலில் இருந்து இறங்குமாறு ரயில்வே கட்டுப்பாட்டாளரால் அறிவிக்கப்பட்ட போதிலும், அவர்கள் இறங்க மறுத்ததால், ரயிலில் இருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நாவலப்பிட்டி பொலி ஸார் தெரிவிக்கையில், இந்த சம்பவத் துடன் தொடர்புடைய இரண்டு வெளி நாட்டவர்களையும் கைது செய்ய இயலாது எனத் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு ரயில்வே பாதுகாப்பு பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என ரயில்வே பொது முகாமையாளர் எச்.எம்.கே. பண்டார தெரிவித்துள்ளார்.

# நீல நிற ஐஸ் போதைப் பொருளுடன் அதை விற்ற பெண் வியாபாரி கைது!

## வாழைச்சேனையில் திங்கள் இரவு சம்பவம்

(கனகராசா சரவணன் )

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள பிறைந்துறைச்சேனை பகுதியில் போதைப் பொருள் வியாபாரி ஒருவரின் வீட்டை நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு முற்றுகையிட்ட விசேட அதிரடிப்படையினர் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பிரபல பெண் வியாபாரி ஒருவரைக் கைது செய்தனர். அவரிடமிருந்து நீல நிறம் கொண்ட புதிய ஐஸ் போதைப் பொருள் உட்பட 4 கிராம் 470 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருள் நற்றும் ஒரு தொகைப் பணம் என்பவற்றைக் கைப்பற்றித் தங்களிடம் ஒப்படைத்துள்ளனர் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.





வாழைச்சேனை கடதாசிஆலை முகாம் விசேட அதிரடிப்படைக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து அம்பாறை - மட்டக்களப்பு உதவிப் பொலிஸ் பணிப்பாளர் வாவிடவிதான வின் ஆலோசனைக்கமைய நேற்று முன்தினம் இரவு முகாம் பொறுப்பதிகாரி கே.ஜி.லக்மால் தலைமையிலான குழுவினர் வாழைச்சேனை பிறந்துறைச்சேனை பகுதியிலுள்ள இந்த வீட்டை முற்றுகையிட்டனர்.

இதன்போது போதை வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த பெண் ஒருவரை கைது செய்தமையுடன் அவரிடமிருந்து 340 மில்லிக்கிராம் புதிய வகையான நீல நிறம் கொண்ட ஐஸ் போதை பொருள் மற்றும் வெள்ளை நிறமுடைய 4 கிராம் 130 மில்லிக்கிராம் உட்பட 4 கிராம் 470 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருள் ஆகியவற்றுடன் 8 ஆயிரத்து 750 ரூபா பணத்தை மீட்டனர்.

கைது செய்யப்பட்ட 36 வயதுடைய பெண்ணை விசேட அதிரடிப்படையினர் தம்மிடம் ஒப்படைத்துள்ளனர் எனவும் இவரது கணவர் ஏற்கனவே போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட நிலையில் கைது செய்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனவும், இவரை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



# விபத்தில் உயிரிழந்த மாணவனுக்கு பாடசாலை சகாக்கள் இறுதி அஞ்சலி

கடந்த வெள்ளிக்கிழமை மீசாலை ஐயா கடைச் சந்திப் பகுதியில் விபத்தில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்த யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவனான செல்வன் சி.பரணிதரனுக்கு பாடசாலை மாணவர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை இந்த மாணவன் பாடசாலையில் இடம்பெற்ற விளையாட்டுப் பயிற்சியை முடித்து விட்டு வீடு நோக்கிச் சைக்கிளில் செல்லும் போது இ.போ.ச. பஸ் மோதி உயிரிழந்திருந்தார்.

மாணவனின் மரணச்சடங்கு நேற்று அவரது வீட்டில் இடம்பெற்று தனங்கிளப்பு வீதியில் உள்ள கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்பட்ட சந்தப்பத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மற்றும் டிறிபேர்க் கல்லூரி மாணவர்கள் அஞ்சலி செலுத்தி வழியனுப்பி வைத்தனர்.

சக மாணவர்கள் அன்னாரது உடலை தோளில் சுமந்துகொண்டு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# ஸ்ரீலங்கன் விமான நிறுவனக் கடனை அரசாங்கம் பொறுப்பேற்கத் தீர்மானம்

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் 50 கோடி அமெரிக்க டொலர் கடனை அரசாங்கத்தினூடாகப் பொறுப்பேற்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தை கடனுடன் விற்பனை செய்ய முடியாமையினால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியால் அமைச்சரவைக்கு யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாக நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.



#WingsOfFriendship #73rdAnniversary #SLAirForce
73
SRI LANKA
AIR FORCE
WINGS of Friendship
உதவியாக
73 பின்தங்கிய பாடசாலைகள் மறுசீரமைத்தல்
73000 புத்தகங்கள் நன்கொடை வழங்குதல்
மரக்கன்றுகள் நடுதல்
வடக்கு மாகாணத்தில்
AIR TATTOO 2024
தொழில்நுட்பம் ,
கல்வி மற்றும் அபிவிருத்தி
கண்காட்சி
06 -10 MARCH
யாழ் முற்றவெளி மைதானம்
பரசூட் காட்சி


#WingsOfFriendship #73rdAnniversary #SLAirForce
73
SRI LANKA
AIR FORCE
WINGS of Friendship
உதவியாக
73 பின்தங்கிய பாடசாலைகள் மறுசீரமைத்தல்
73000 புத்தகங்கள் நன்கொடை வழங்குதல்
மரக்கன்றுகள் நடுதல்
வடக்கு மாகாணத்தில்
AIR TATTOO 2024
தொழில்நுட்பம் ,
கல்வி மற்றும் அபிவிருத்தி
கண்காட்சி
06 -10 MARCH
யாழ் முற்றவெளி மைதானம்
மோப்ப நாய்களின் சாகசம்


#WingsOfFriendship #73rdAnniversary #SLAirForce
73
SRI LANKA
AIR FORCE
WINGS of Friendship
உதவியாக
73 பின்தங்கிய பாடசாலைகள் மறுசீரமைத்தல்
73000 புத்தகங்கள் நன்கொடை வழங்குதல்
மரக்கன்றுகள் நடுதல்
வடக்கு மாகாணத்தில்
AIR TATTOO
2024
தொழில்நுட்பம் ,
கல்வி மற்றும் அபிவிருத்தி
கண்காட்சி
06 -10 MARCH
@ யாழ் முற்றவெளி மைதானம்
தற்காப்பு கலைகள்
அடிமுறை சண்டை காட்சிகள்


#WingsOfFriendship #73rdAnniversary #SLAirForce
73
SRI LANKA
AIR FORCE
WINGS of Friendship
உதவியாக
73 பின்தங்கிய பாடசாலைகள் மறுசீரமைத்தல்
73000 புத்தகங்கள் நன்கொடை வழங்குதல்
மரக்கன்றுகள் நடுதல்
வடக்கு மாகாணத்தில்
AIR TATTOO
2024
தொழில்நுட்பம் ,
கல்வி மற்றும் அபிவிருத்தி
கண்காட்சி
06 -10 MARCH
@ யாழ் முற்றவெளி மைதானம்
விமான கண்காட்சி
மற்றும் விமான சாகசம்




THE CITIZENSHIP ACT

CERTIFICATE UNDER SECTION 17

# இந்தியாவில் பிறந்த இலங்கையர்களின் பிள்ளைகளுக்குப் பிரஜாவுரிமை வழங்கல்

## வவுனியாவில் நேற்று நிகழ்வு

(கே.வசந்தன்)

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய இலங்கையர்களின் பிள்ளைகளுக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கி வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட செயலகக்கேட்போர் கூடத்தில் நேற்று இந்நிகழ்வு இடம்பெற்றது.

1990 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் யுத்தம் காரணமாக இந்தியாவுக்குச் சென்ற இலங்கையர்கள் அகதிகளாக இந்தியாவில் தங்கியிருந்த நிலையில் இந்தியாவில் அவர்களுக்கு குழந்தைகள் பிறந்திருந்தன. அவர்கள் யுத்தம் நிறைவுக்கு வந்ததன் பின்னர் மீண்டும் இலங்கைக்கு வந்திருந்தனர்.

நாட்டிற்கு வந்த – இந்தியாவில் பிறந்த – இலங்கையர்களின் பிள்ளைகளுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை பெறுவதில் சிக்கல்கள் நீடித்தன. இதனால் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களையும், அரச உதவித் திட்டங்களையும் பெற முடியாது அப்பிள்ளைகள் கஷ்டப்பட்டனர்.

இதனை அடுத்து குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் அனுசரனையில் ஒபர் சிலோன் எனப்படும் அரசு சார்பற்ற நிறுவன பங்களிப்போடு இவர்களுக்கான பிரஜாவுரிமை பெற்றுக் கொடுக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. இதன் ஒரு கட்டமாக 22 வயதுக்கு மேற்பட்ட – இந்தியாவில் பிறந்த – இலங்கையர்களின் பிள்ளைகள் 71 பேருக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட்டது.

இவ்வாறு பிரஜாவுரிமை பெற்றவர்கள் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் தற்போது வசித்து வருகின்றனர்.

இந் நிகழ்வில் வவுனியா அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத் சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், குடிவரவு, குடியகல்வு திணைக்கள பிரதி கட்டுப்பாட்டாளர் இ.எச்.ஜி. பிரசங்க, ஒபர் சிலோன் நிறுவன தலைவி சி.சூரியகுமாரி உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.



















# நவீன வசதிகளுடன் 200 மின்சார பஸ்கள் சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை

நவீன வசதிகளுடன் கூடிய 200 மின்சார பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளன என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக தமிழ் – சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் 50 மின்சார பஸ்களை சேவையில் ஈடுபடுத்த வுள் ளோம் என அவர் தெரிவித்துள் ளார்.

எதிர்காலத்தில் தனியாராலும், இலங்கைப்போ க்குவரத்து சபையாலும் இறக்குமதி செய்யப்படும் அனைத்து பஸ்களிலும் சி.சி.ரி.வி. கமராக்களை பொருத்துவது கட்டாயமாக்கப்படும் எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கைப் போக்குவரத்து சபையும், ரயில்வேத் திணைக்களமும் இணைந்து 2017 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தவிருந்த E-Ticket முறையை, அடுத்த 6 மாதங்களுக்குள் அமுல்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.



# மணல் ஏற்றிச் சென்றமைக்காக மடக்கப்பட்ட டிப்பரில் பாலை மரக்குற்றிகளும் அகப்பட்டன

(த.சுபேசன்)

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப் பாணம் நோக்கி டிப்பர் வாகனத்தில், மணலுக்குள் மறைத்து எடுத்துச் செல லப்பட்ட பல லட்சம் ரூபாய் பெறுமதியான பெருந்தொகையான பாலை மரக்குற் றிகளை நேற்று திங்கட்கிழமை மதியம் சாவகச்சேரிப் பொலிஸார் கைப்பற்றினர்.

மேற்படி டிப்பர் வாகனத்தை சோத னையிட்ட பொலிஸார் உரிய அனும திப்பத்திரம் இன்றி மணலை எடுத்துச் சென்ற குற்றச்சாட்டுக்காக சாரதியை கைது செய்தமையுடன் வாகனத்தையும் பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றி ருந்தனர்.

அதன் பின்னரே மணலுக்குள் பாலை மரக் குற்றிகளை மறைத்து எடுத்துச் சென்றிருந்தமை பொலி ஸாருக்கு தெரிய வந்துள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ரயில்வே தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கவிருந்த பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கை கைவிடப்பட்டது

ரயில்வே தொழிற்சங்கங்கள் இணைந்து நேற்று நள்ளிரவு முதல் முன்னெடுக்கவிருந்த பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சின் செயலாளருடன் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று நள்ளிரவு முதல் 48 மணி நேர வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்த ரயில்வே தொழிற்சங்கங்கள் இணைந்து திட்டமிடப்பட்டிருந்தன.

# காணி முகாமைத்துவ பொறுப்பு நிதியத்தை ஸ்தாபிப்பதற்கு அமைச்சரவை அனுமதி

முதலீட்டு நோக்கங்களுக்காக அரச மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களுக்கு சொந்தமான காணிகளை முறையாக விடுவிப்பதற்காக காணி முகாமைத்துவ பொறுப்பு நிதியத்தை ஸ்தாபிப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்பட்டதாக அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 82 சதவீதம் அரசுக்கு சொந்தமானதாக காணப்படுவதுடன், அதன் பாதுகாப்பு மற்றும் நிர்வாகம் என்பன வெவ்வேறு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, புதிய முதலீடுகளின் போது, முதலீட்டாளர்களுக்கு பொருத்தமாக காணியை அடையாளம் கண்டு, அவற்றை விடுவிப்பதற்கு காணி முகாமைத்துவ பொறுப்பு நிதியம் ஸ்தாபிக்கப்படவுள்ளது.





# ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இசை வாத்தியங்கள் முழங்க விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டு பாடசாலை அதிபர் கந்தசாமி சிவனேசன் தலைமையில் நிகழ்வு ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கணினிப் பொறியியலாளரும் டெக்கொறின் சொலூசன் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அரியகுமார் சிறிகரன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் செல்லத்துரை ஸ்ரீ இராமச்சந்திரனும், கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் கிருஷ்ண பிள்ளை பாக்கியநாதனும், முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலய ஆசிரியர் வாரித்தம்பி பிரபாகரனும், பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சரவணமுத்து சிதம்பரநாதனும் கலந்துகொண்டனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், வெற்றிக் கோப்பைகளும் விருந்தினர்களால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# இன்றைய ராசி பலன்கள் - 06.03.2024




இன்று நம்பிக்கை நிறைந்த நாள். உங்கள் இலக்குகளை அடைய தைரியம் மற்றும் உறுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும். மொத்தத்தில் வளர்ச்சி காணப் படும். இது உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்கும்.

இன்று உங்கள் பணிகளை புத்துணர்ச்சியுடனும் உற்சாகமுடனும் மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைகளை மேலதிகாரிகள் மதிப்பார்கள்.

உங்கள் துணையுடன் இனிமையாகப் பேசுவீர்கள். உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் நிறைந்து காணப்படும். உங்கள் நிதிநிலை உயரும்.

இன்று தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




எதிர்மறை விளைவுகளை தடுக்க இந்து எந்த செயலையும் தொடங்குவதற்கு முன் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைவதில் தாமதங்கள் காணப்படும். நற்பலன்கள் காண்பதற்கு பொறுமை அவசியம்.

பணியிடத்தில் ஏதுவான சூழ்நிலை இருக்காது. இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைப்பது அவசியம்.

கவனமற்ற வார்த்தைகளின் காரணமாக உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். விஷயங்களை லேசாக எடுத்துக்கொண்டு உங்கள துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பது சிறந்தது.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. கூடுதல் செலவினங்கள் காணப்படும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கண்களில் எரிச்சல்கள் ஏற்படலாம். தகுந்த மருத்துவம் மேற்கொண்டால் நலமுடன் இருக்கலாம்.




இன்று அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். இதனால் செயல்கள் சுமூகமாக நடக்கும். அனுசரித்து நடந்து கொள்ளுங்கள். முக்கிய முடிவுகள் எடுப் பதை தவிர்த்திடுங்கள்.

உங்கள் கீழ் பணிவோருடன் மோதல கள் காணப்படும். பணிகள் சுமூகமாக நடக்க பதற்றத்தை தவிர்த்தல் நல்லது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்த் திடுங்கள். இந்த உணர்வால் உறவில் மகிழ்ச்சி நிலவாது.

செலவுகள் அதிகமாவதைக் காண்பீர்கள். நிதியில் ஸ்திரத்தன்மை ஏற்படுத்த உங்கள் செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

நீங்கள் ஆரோக்கியமாய் இருக்க உணவில் கவனம் தேவை. யோகா மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் குணம் பெறலாம்.




இன்று அதிக முயற்சிகள் எடுக்க வேண்டிய சூழ்நிலை காணப்படும். உங்கள் உறுதி மூலம் வெற்றியை அடைய இது உதவும். உங்கள் நம்பிக்கை மூலம் நீங்கள் உயர் நிலையை அடைவீர்கள்.

பணியிடச் சூழலில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். புதிய வாய்ப்புகள் காணப்படும்.

உங்கள் துணையுடன் நெருக்கமான பிணைப்பை வளர்ப்பீர்கள். சமநிலை அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் திருப்தி நிலவும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் நிதி சம்பந்தமான எதிர்கால நடவடிக்கைகளை நீங்கள் திட்டமிட இயலும்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் மனதில் காணப்படும் திருப்தி காரணமாக நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




நீங்கள் மேற்கொள்ள வேண்டிய கூடுதல் பொறுப்பு காரணமாக இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும்.

இன்று அதிக பணிகளை மேற்கொள்ள வேண்டியி ருக்கும். எனவே உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற சமநிலை அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். உறவின் நல்லிணக்கம் பேண இத்தகைய உணர்வுகளை கைவிட வேண்டும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. செலவுகள் அதிக மாக இருக்கும். தற்போதைய நிலைமையை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப் படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். தியானம் மற்றும் பிரார்தனை மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம். இத னால் உங்களுக்கு நன்மை விளையும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.பணியில் தாமதங்கள் எதிர்கொள்வீர்கள். சக பணியாளர்களால் சில தொல்லைகள் ஏற்படும்.

உங்கள் உறவு நல்லுறவாக உங்கள் துணையுடனான நல்லிணக்கத்தை பாதிக்கும் உணர்வுகளை தவிர்க்க வேண்டும். பதட்டமான சூழ்நிலை உறவை பாதிக்கும்.

இன்று கூடுதல் செலவுகள் செய்வீர்கள். பணப்பற்றாக் குறை ஏற்பட வாய்ப்புள்ளது. தொண்டை சம்பந்தமான தொல்லைகள் பாதிப்பை அளிக்கும். குளிர்ச்சியான உணவு வகைகளை உட்கொள்வதை தவிர்க்கவும்.




கோவிலுக்கு செல்வதன் மூலம் ஆறுதல் பெறலாம். இது தான் இன்று மிகவும் தேவையானதாக இருக்கும். இன்றைய செயல்கள் யாவும் சுமூகமாக நடக்க விஷயங்களை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் பணிகளை சரியாக மேற்கொள்ள திட்டமிட்டு பணியாற்ற வேண்டும். பணியில் கெட்ட பெயர் ஏற்பட வாய்ப்புள்ளது. நீங்கள் சிறிது கவனமாக நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியின்றி காணப்படுவீர்கள். உங்கள் வருத்தமான மனநிலையை வெளிப்படுத்தாமல் இருப்பதன் மூலம் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்க இயலும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். தேவையான நிதியை உருவாக்க நீங்கள் போராடுவீர்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்கும். உங்கள் விருப்பங் களை எளிதில் பூர்த்தி செய்து கொள் வீர்கள். நீண்ட கால திட்டங்கள் பலனளிக்கும்.

பணியிடச் சூழல் உற்சாகத்தை அளிக்கும். மகிழ்ச்சியும் திருப்தியும் உங்கள் செயல்திற னில் பெருமை கொண்டு வரும்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வை வெளிப் படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்து ணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை அதிர்ஷ்டகரமாக இருக்கும். இன்று கணிசமான தொகை காண்பீர்கள். மகிழ்ச்சி யான விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.உங்க ளின் மகிழ்ச்சியான மற்றும் திருப்தியான மனநிலை காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.03.2024




உங்கள் உணர்வுகளை இன்று கட்டுப்படுத்தவேண்டிய நாள். பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருங்கள். நம்பிக்கை ஒன்றே வெற்றிக்கு வழி வகுக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை சிறப்பாக ஆற்ற நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு உங்களுக்கு கிடைகாது.

உங்கள் துணையிடம் நீங்கள் தீவிரமாக நடந்து கொள்வீர்கள். நல்ல விளைவுகள் காண எதையும் லேசாக எடுத்துக் கொண்டு சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று விருப்பமான விளைவுகள் ஏற்படும் சூழ்நிலை இருக்காது. தேவையற்ற செலவுகளை சந்திப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்றைய நாளை நீங்கள் சுமூகமாக கழிக்க இயலாது. உங்கள் போக்கில் சோம்பல் காணப்படும். தேவையற்ற குழப்பங்களால் எண்ணங்களில் தெளிவு இருக்காது. எதிர்மறை எண்ணங்களை தவிர்த்து நேர்மறை எண்ணம் கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்களின் குழப்பமான மனநிலை காரணமாக உங்கள் கசப்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். அத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது. பண இழப்பு காணப்படலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும். கண்களுக்கு மருத்துவம் மேற்கொள்ள வேண்டும். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. நல்ல விளைவுகளைக் காண நீங்கள் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.

பணியிடத்தில் இருக்கமான பணிகள் காணப்படும். உங்கள் சக பணியாளர்களிடமிருந்து அதிக ஒத்துழைப்பு கிடைக்காது.

உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க நகைச்சுவை அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். நீண்ட நெடிய வலுவான உறவுப் பிணைப்புக்கு முயற்சி எடுக்க வேண்டும். இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். குறைந்த பணத்தில் நிலைமையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று செழிப்பான நாள். நீங்கள் தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். இன்று முக்கியமான இலக்குகளை அடைவீர்கள்.

உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் தரமான பணிக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பான உறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும்.

சிறந்த ஆற்றலும் தேக நிலையும் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.





